உ
கணபதி துணை


# பரந்தன்
# இரசாயனத் தொழிற்சாலை.



## கோரக்கன்கட்டு சித்திவிநாயகர் ஆலய
# சிறப்பு மலர்.

இரசாயனத் தொழிற்சாலை
பரந்தன்.

20-12-73



## கோரக்கன்கட்டு சித்திவிநாயகர்க்கோர் துதி

கோடையிலும் சீத நீர்
　　ஆடையிலும் சீத நீர்
வீடமைத்த சூழலே சீத நீர்
　　கோடுடைய வேழமுகத்தையா
தேடுகின்றோம் திருவடியை
　　நாடுகின்றோ முமதடியை
கூடிக்குரல் கொடுப்போம் கோரக்கர்பதி
　　நாடியிரு சித்தி விநாயகரே.

ஆக்கம் சேயோன்
ப. இ. தொழிற்சாலை.



# "அணிந்துரை"

எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.

— "திருக்குறள்"

முன்னொரு காலத்தோன்றிருந்து மறைந்து, பின்னொரு காலத்தே தோன்றுவதியல்பு இதையே தோன்றின மறையும் மறைந்தன தோன்று மென்பர்.

இவ்விடத்தில் விநாயகராலயம் இருந்ததென்பதை வலியுறுத்தச் சரித்திரங்களோ அன்றிச் சில தோத்திரப் பாக்களோ சிதைந்த ஆலயச் சின்னங்களோ கிடைத்தில. இவற்றை ஆராய்வதற்கு கோரக்கன்கட்டு என்னும் அர்த்த மற்றதும் இனிமையற்ற வன்சொல்லுமாகிய கோரக்கன் கட்டை முன்வைத்தே சிறிது ஆராய்ந்து, இன்று திருநிறைந் திலங்கும் இத்திருப்பணிக்கோர் நற்பெயர் காண்போம். பழையன கழிதலும் யுதியன புகுதலும் விதிமுறைதானே.

பதினெண் சித்தர்களுள் கோரக்கரென்னும் மருத்துவச் சித்தருளரென்பதும் சரித்திரப் பிரசித்தம் முனிவர்கள் சித்தர்கள் நகரை அண்மித்த கானகங்களிலே ஆச்சிரமமைத்து வாழ்ந்தார்களென்பதைச் சரித்திரங்கள் வாயிலாக நன்கறியக்கிடக்கின்றன. சித்தர்கள் பெரும்பாலும் தமது ஆராய்வுகள் இனிதுமுடிவதற்கும் சித்தை விரும்பியும் சித்திமுத்தியளிக்கும் வித்தகனாகிய விநாயகப் பெருமானையே தம் குல தெய்வமாக வணங்கினர் என்பதை வைத்திய சாஸ்த்திரங்களில் பரக்கக் காணலாம். கோரக்கன் என்னும் சொல்லின் ஈற்றில் வரும் (ன்) என்னு மெழுத்தை நீக்கி அதில் (ர்) என்னும் எழுத்தைப் புதைத்து கோரக்கர் என்றும், ஆதாரமற்ற (கட்டை) என்னுஞ் சொல்லை நீக்கி பதி என்னுஞ் சொல்லை வைத்து கோரக்கர் பதி யென்றழைப்பதைக் கற்றறிந்த பெரியோர்கள் உள்ளுவரன்றி எள்ளாரென்பதே என் சிற்றறிவின் முடிபும், துணிபும்.

வண்ணை. வைத்தியகலாநிதி,
நா. சிவரெத்தினம் - பசுமணி.

# சிறப்பு மலர் முன்னுரை.

1955-ம் ஆண்டு பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை கட்டிடப்பகுதி பரிசோதகராகக் கடமையாற்றிய திருவாளர் சு. அம்பிகாபதி அவர்கள் தொழிலாளர்களின் நலன்கருதி ஓர் வாசிகசாலையை அமைக்க உதவியளித்தார். அவ்வாசிக சாலை அங்கத்தவர்கள் ஒன்றுகூடி ஓர் ஆலயம் அமைக்க வேண்டுமென்று முடிவுசெய்தபொழுது தொழிற்சாலையின் தலைவராகக் கடமையாற்றிய திரு. கேணல் ஆர். சபாநாயகம் அவர்கள் அங்கத்தவர்களின் முடிவை வியந்துபாராட்டி திருப்பணி வேலைக்கு நன்கொடையாக ரூபா. 50—00 க்கு காசோலையும் தந்து நல்லாசியும் வழங்கினர்.

இதன்பின்னர் இறைவன் திருவருள் கிடைக்காததினால் போலும் அம்முயற்சி சிலகாலம் தடைப்பட்டிருந்தது.

தோற்றம்:— 1969-ம் ஆண்டு தொழிற்சாலை ஊழியர்கள் சம்பள உயர்வு கோரி அஹிம்சாவழியில் போராட்டமொன்றை ஆரம்பித்தார்கள். போராட்டத்தைத் தற்பொழுது கோவிலிருக்கும் பகுதியையே தெரிவுசெய்து, துப்பரவு செய்து ஓர் சிறு கொட்டிலும் அமைத்து நடாத்தினார்கள்.

16-6-69 ல் போராட்டத்தை ஆரம்பித்து சுமார் இரண்டுமாத காலம்வரை தொடர்ச்சியாக நடாத்தினர்கள் இரவு பகல் பாராது புற்றிலும், புதரிலும், மழையிலும், கொடிய வெய்யிலிலும் வாடி வதங்கி இருந்த இரவு நாட்களில் எங்களுக்குப்பக்கத்தே யானை, வந்து நிற்கவும், சொற்பனம் கண்டுள்ளோம். இது விநாயகப் பெருமான் யானை வடிவமாக உலாவியதாக உணர்ந்தோம். ஓர் நாள் இரவு அவ்வழிவந்த ஓர் வயோதிபர் எங்களைக் கண்ணுற்று எங்களுடன் சிலமணி நேரம் தங்கியிருந்தார். அவ்வமயம் அப்பெரியார் அவ்விடத்தே முன்னொருகாலத்தே ஓர் விநாயகர் ஆலயம் இருந்து அழிந்துபோனதாக ஒரு கதை இருந்ததென்றும், காடாயிருந்தமையால் யானைகளுக்கு அஞ்சி வழிப்போக்கர்கள் இவ்விடத்தில் தேங்காய் உடைத்துக் கற்பூரம் கொழுத்தி வழிபட்டுப்போனது தனக்குத்தெரியுமென்றும் அவ்விடத்தை அசுத்தப்படுத்தாமல் நம்பிக்கையுடன் விநாயகரை வேண்டுதல் செய்தால் வெற்றி நிச்சயம் கிடைக்கும் என்று கூறி, தற்போழுது ஆலயமிருக்கும் இடத்தையும் சுட்டிக்காட்டி சென்றுவிட்டார்.

சொற்பனத்தில் கண்ட யானையையும், அப்பெரியாரின் அறிவுரைகளையும், முன்பு ஆலயம் அமைக்க முற்பட்டமையும் முன்னைய சைவ அன்பர்களின் ஆலயம் அமைக்க வேண்டுமென்று அபிப்பிராய முற்றதையும் நினைந்து அவ் விடத்தே ஓர் விநாயகர் ஆலயம் அமைக்க வேண்டுமென முடிவு செய்தோம். திருவாளர்கள் கி. தியாகராசா வே. பரமநாதன், சொ. தர்மநாயகம், இ. சரவணமுத்து அ. பொன்னையா, சோ. கந்தையா, சி. குழந்தைவேலு, ந. இராமநாதன், சி சுந்தரலிங்கம், நா கணேசரத்தினம் ஆகியோரின் விடா முயற்சியினால் இரவோடு இரவாவாக 13–8–1969 சூரிய உதயத்தின் முன் விநாயகப் பெருமானின் திருவுரு நிறைவெய்தியது. அன்று பிற்பகல் கொழும்பிலிருந்து வந்த செய்தியில் எங்கள் கோரிக்கைகளுக்கு பூரண வெற்றி கிடைத்து விட்டது என்று அறிந்து மிக்க மகிழ்ச்சியடைந்தோம். அடுத்தநாள் காலை தொழிலாளர்கள் எல்லோரும் ஒன்றுகூடி 14–8–1969 விநாயகப்பெருமானுக்கு பழம், பாக்கு, வெற்றிலை, புஸ்பம் படைத்து, தேங்காய் உடைத்து, வெற்றி விநாயகரென நாமமுமிட்டு, வணங்கி தொழிற்சாலைக்கு மிக்க மகிழ்ச்சியுடன் சென்றோம். அடுத்த சில நாட்களுக்குள், விநாயகப் பெருமானுக்கு ஓர் சிறிய கொட்டகையும் அமைத்து ஆலயத்தைப் பரிபாலிக்க ஓர் திருப்பணிச்சபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

அதன் விபரம் பின் வருமாறு:-

தலைவர்:- திரு. சி. குழந்தைவேலு
உபதலைவர் – திரு அ. பொன்னையா
செயலாளர்:– திரு கா. சி. ஆறுமுகம்
உபசெயலாளர் திரு கா. லோகநாதன்
பொருளாளர்:– திரு கி. தியாகராசா
உபபொருளாளர்:– திரு வே. பரமநாதன்

## திருப்பணிச்சபை நிர்வாக அங்கத்தினர்:-

| | |
|---|---|
| திரு ந. இராமநாதன் | திரு சி. விக்கினேஸ்வரன் |
| திரு இ. சரவணமுத்து | திரு சொ. தர்மநாயகம் |
| திரு க. மேகவர்ணம் | திரு வ. சிவஞானம் |
| திரு க. கணபதிப்பிள்ளை | திரு பொ. தங்கராசா |
| திரு க. திருநாவுக்கரசு | திரு சொ. பாலசுப்பிரமணியம் |
| திரு வே. நமசிவாயம் | திரு நா. வியாக்கிரமபாதர் |
| திரு ம. அம்பலவாணர். | |

திருப்பணிச்சபையினர்:- விநாயகப் பெருமானுக்கு முறைப்படி ஓர் ஆலயம் அமைக்க வேண்டுமென முடிவு செய்து அதற்குரிய ஆயத்தங்களைத் தொடங்கும் வேளையில் ஆலயத்தை வேறு இடத்தில் கட்டும்படி சிலரால் சிறுத் தடங்கலும் ஏற்பட்டது. சில நாட்களின் பின்னர் தொழிற் சாலை நிர்வாகத்தினர் எங்களின் விருப்பப்படி இன்று விநாயகப்பெருமான் எழுந்தருளியிருக்கும் இடத்திலேயே ஆலயம் அமைக்குமாறும், ஆலயத்துக்கு வேண்டிய உதவி கள் அனைத்தும் செய்யக் காத்திருப்பதாகவும் கூறித் திருப் பணி வேலைகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்துதவியது இறைவன் செயலன்றி வேறல்லவென்பதே எமதெண்ணம் இவற்றிற்கெல்லாம் உதவியாயிருந்த பெருமை, முன்னுள் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. டட்லி குணசேகரா அவர் களையேசாரும்.

இவருக்கு முன்னைய கூட்டுத்தாபன தலைவர் திரு. ம. சிவநாதன் அவர்களுடைய காலத்தில்தான் வெற்றி விநாயகர் ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது. அவர் ஆலயத் திருப்பணிக்கு பண உதவி செய்ததும் குறிப்பிடத்தக்கது. இவர்கள் இருவருக்கும் இறைவன் நல்லருள் பாலிக்கவேண்டு மென்று இறைஞ்சுகின்றோம்.

வெற்றிவிநாயகர் பல சித்திகளை அன்பர்கட்குச் செய்த படியால் சித்திவிநாயகர் எனப் பெயரிட்டோம்.

விநாயகராலய அத்திவாரமும், கும்பாபிஷேக வைபவ மும் 1970-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 12-ம் திகதி வியாழக்கிழமை காலை 9-00 மணி 30 நிமிட சுபவேளையில் சுண்ணாகம் சமாதான நீதிபதியும் அகில இலங்கை சைவ அனுட்டான சபைத் தலைவருமான, திரு. ம. சிவலிங்கம் அவர்களின் மேற்பார்வையில் அச்சுவேலியைச் சார்ந்த, பிரம்மஸ்ரீ நா. குமாரசாமிக் குருக்கள் அவர்கள் அடிக்கல் நாட்டி சகல கிரியைகளையும், முறையே நடாத்தினர். இவ்வைபவத்தில் அப்போதய உற்பத்தி அதிபர் திரு. பொ. அ. சச்சிதானந்தன் அவர்களும், பங்குகொண்டு விழாவை சிறப்பித்தார்.

இதன்பின்னர் திருப்பணிச் சபையினர் திட்டமிட்டபடி தொழிற்சாலைப் புண்ணிய சீலர்களின் இடைவிடாத பொருளுதவி, சரீர உதவி ஆகியவற்றினாலும் தொழிற்சாலையில் கடமைபுரியும் அனைவரும் சமய வேற்றுமையின்றி இத்திருப்பணிக்கு உதவியமையினாலும், திருப்பணி வேலைகள் நிறைவேற்றப்பட்டு, 2-11-73 வெள்ளிக்கிழமை பகல் 12-30-1-00 மணிக்கு மிடையில் விநாயகர் பூசை ஆரம்பமாகி 8-11-73 வியாழக்கிழமை காலை 10-00 மணியளவில்,

பிரதம குருக்கள்: சிவஸ்ரீ நா. சிவசாமிக் குருக்கள்,
சிவாகமஞானபானு, கரணவாய்.

சர்வபோதகாசாரியார்: சிவஸ்ரீ த. காசிநாதக் குருக்கள்
ஆரிய திராவிட பண்டிதர், கரணவாய்,

உதவிக் குருமார்:

சிவஸ்ரீ வை. சபாரத்தினக் குருக்கள்,
கருணாகரப் பிள்ளையார் கோவில், உரும்பராய்.

சிவஸ்ரீ ச. இராமநாதக் குருக்கள், கரணவாய்.

சிவஸ்ரீ சா. குமாரசாமிக் குருக்கள்,
கந்தசாமி கோவில், கிளிநொச்சி.

சர்வசாதகாசாரியார். சிவஸ்ரீ சி. சரகுகவரதராஜக் குருக்கள்
மாரியம்மன் கோவில், தெல்லிப்பளை.

இன்னும் சில சிவாசாரியார்கள் கலந்து ஆவர்த்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

8-11-73 வியாழக்கிழமை மாலை நடைபெற்ற குப்பாபிஷேக பூசையுடனும் ஸ்ரீ விநாயகர் வீதி உலாவுடனும் இவ்வைபவம் இனிது நிறைவேறியது.

இத்துடன் தொடர்பான கும்பாபிஷேக விளக்க உபந்நியாசத்தின்போது, உபந்நியாசம் செய்த சிவஸ்ரீ நா. சிவசாமிக் குருக்கள் பக்தர்கள், ஆசாரசீலர்களாக விநாயகப் பெருமானை வழிபடவேண்டிய அவசியத்தையும் சைவத்தின் தொன்மையையும், மிகவும் விரிவாக விளக்கினர். அவர் மேலும் பேசுகையில் உலகம்தோன்றிய காலம் முதல் இந்து மதம் இருந்துவந்துள்ளது.

சிவன், விஷ்ணு, பிரம்மா, விநாயகர் வழிபாடு கணக்கிடமுடியாத காலவரையற்றது. என்பதைச் சங்க இலக்கியங்கள் வலியுறுத்துகிறது. இந்து சமயத்தவரின் முழுமுதல்

கடவுளான சிவபிரானின் திருக்குமாரர்களான சுப்பிரமணியர், விநாயகர், வைரவர், வீரபத்திரர் ஆகியோரில், விநாயகப் பெருமான் ஓங்காரரூபமாக அமைந்துள்ளமை உலகம் முழுவதற்கும் ஆதி அட்சமாக அமைந்துள்ளது. இடர்களைக் களைய விநாயகப் பெருமானின் பாதாரவிந்தங்களை வழிபட மறக்கக்கூடாது என்று கூறினர்.

## கும்பாபிஷேக தினத்தன்று மரம்நாட்டு விழாவும் சிறப்பாக நடைபெற்றது.

இவ்வைபவத்தில்,

முன்னாள் அரசாங்க அதிபர், திரு. மா. ஸ்ரீகாந்தா,

உதவி அரசாங்க அதிபர், திரு. தி. முருகேசம்பிள்ளை,

திரு. ம. சிவலிங்கம், (அ. இ. சைவ. அனுட்டான சபைத் தலைவரும், சுன்னாகம் சமாதான நீதிபதியும்)

திரு. அ. சிவசுந்தரம், (பொறியியலாளரும், முன்னாள் கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினரும்)

திரு. க. கனகராசா (மில்க்வைற் சோப் தொழிற்சாலை அதிபரும், சிவநெறிப்புரவலர் சிவதர்ம வள்ளல்)

திரு. D. K சுப்பிரமணியம், (பொது முகாமையாளரும். இயக்குனர் சபை அங்கத்தவரும்)

திரு. க. பாலேந்திரா, (உற்பத்தி அதிபர்)

திரு. K. சரவணமுத்து, (பொறியியலாளர்)

திரு. K. ஸ்ரீகாந்தன், (கணக்காய்வாளர்)

திரு. மு. யோகலிங்கம், (சமாதான நீதிபதி கிளிநொச்சி)

திரு. க. மார்க்கண்டு (சைவத்தொண்டர் நுணாவில்)

திரு. ந. இராமநாதன், (ப. இ. தொ. ஊ. ம. தலைவர்)

திரு. சி. குழந்தைவேலு, (திருப்பணிச் சபைத் தலைவர்)

ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். ப. இ. பொருட்கள் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. P. L. W. பொன்னன்டோ அவர்களின் ஆசிச்செய்தியும் கிடைத்தது. இதைத்தொடர்ந்து சிவஸ்ரீ கு. இரத்தினேஸ்வரக் குருக்கள் தற்காலிகமாக குருக்களாக நியமிக்கப்பட்டு தொடர்ந்து 40 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று, இன்று 20-12-73 வியாழக்கிழமை நடைபெறும் சங்காபிஷேகம் விஷேட நிகழ்ச்சிகளுடன் முடிவுறுகின்றது.

இத்திருப்பணிக்குச் சமயவேறுபாடின்றி ஒத்துழைப்பு நல்கியபடியாலும், சித்திவிநாயகப் பெருமானின் சித்தியாலும் இத்திருப்பணிவேலையின் முதற்கட்டம் முடிவுற்றுள்ளது. தொடர்ந்து இத்திருத்தலத்தின் தொடர்பான திருப்பணிவேலைக்கு அனைவரும் முன்னையதுபோல் உதவிசெய்யக் கோரக்கன்கட்டுச் சித்திவிநாயார் அருள்பாலிப்பாராக.

இத்திருப்பணிக்கு உதவிய திருவருட் செல்வர்கள் –

1. மில்க்வைற் சோப் தொழிற்சாலை அதிபரும் கொடைவள்ளலுமான சிவநெறிப் புரவலர், சிவதர்ம வள்ளல் உயர்திரு. க. கனகராசா அவர்கள் கங்காதர்மமெனும் தூபத்தைப் பெரும் பொருட்செலவில் முடித்துள்ளார். அத்துடன் மரம்நாட்டு விழாவின்போது கனி மரங்கள், செடிகள், ஆகியனவும், பிரசுரங்களும் தந்தும் உதவியுள்ளார். இவர் எல்லா நலன்களும் எய்திப் பல்லாண்டு வாழ்க, எல்லாம் வல்ல எம்பெருமான் சித்திவிநாயகர் சித்தமகிழ்ந்தருள் பாலிப்பாராக.

2. முன்னாள் அரசாங்க அதிபர் திருநிறைச் செல்வர், த. இராசதுரை அவர்கள் திருமஞ்சனக் கிணற்றுத் திருப்பணியேற்று, அதற்குரிய ஒருபகுதிப் பணத்தையும் சபையிடம் கையளித்துள்ளார். காலநிலையின் காரணமாக அத்திருப்பணி தாமதமானதையிட்டு வருந்துகிறோம். இவரது மறுபகுதிப்பணமும் கிடைத்து இத் திருப்பணி நிறைவுற்று இவர் எல்லாநலனும் பெற்றுப் பல்லாண்டு வாழ்க எல்லாம் வல்ல இறைவன் கோரக் கன்கட்டு சித்திவிநாயகர் திருவருள் பாலிப்பாராக.

3. நுணாவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சுன்னாகம் கணேசன் ஸ்ரோர்ஸ் உரிமையாளரும், பிரபல வர்த்தகரும் தர்மசீலருமாகிய திருவருட்செல்வர் க. மார்க்கண்டு அவர்கள் திருப்பணிக்காக பண உதவியும், கணக்கற்ற வேறுபல தொண்டுகளும் செய்துள்ளார். அவர் பல்லாண்டு வாழவும், பலநன்மைகள் பெறவும், மேலும், மேலும் திருப்புணித் தொண்டுகள் புரியவும் சித்திவீநாயகப் பெருமான் திருவருள் பாலிப்பாராக.

4. சிவபதமடைந்த முன்னாள் பிரபல நியாயவாதியும், உயர் நீதிபதியுமாகிய சிவஞானச் செல்வர் அம்பலவாணர்–சுப்பிரமணியம் அவர்களது திருமகனும் இரசாயனத் தொழிற்சாலைப் பொது முகாமையாளருமாகிய திருவருட்செல்வர் D. K. சுப்பிரமணியம் அவர்கள் திருப்பணிக்கென ஆற்றிய தொண்டும் சொல்லுந்தரமன்று வேண்டுவார் வேண்டுவதை ஈபவனும் கோரக்கன்கட்டு கோமானுமாகிய சித்திவிநாயகப் பெருமான் திவ்விய திருவருள் பாலிப்பாராக.

தொழிற்சாலையில் ஓர் ஆலயம் அமைக்கப்படவேண்டுமென ஆரம்பகாலத்தில் நல்லுரைகள் கூறிய திருவாளர்கள்.

கேணல் திரு. R. சபாநாயகம் (முன்னாள் கூட்டுத்தாபனத் தலைவரும் இயக்குனர்சபை உறுப்பினரும்)
திரு. சு. அம்பிகாபதி (கட்டிடப் பரிசோதகர்)
,, C. கோபாலராவ் (முதல் உற்பத்தி அதிபர்)
,, க. அழகரத்தினம் (பொறியியலாளர் வாக்கர் & சன்ஸ்)
,, அ. சிவசுந்தரம் (பொறியியலாளர்)
,, P. நடேசன் (பொறியியலாளர்)
,, இ. சரவணபவானந்தன் (பொறியியலாளர்)
,, கலாநிதி சு. ஞானலிங்கம் (இயக்குனர் சபை உறுப்பினரும், பிரதம நிர்வாக அதிகாரியும்)
,, க. வாமதேவா (பொன்னாலை)
,, வீ. கதிர்காமநாதன் (மின்சாரப்பகுதி)
,, R. G. சிங்கம் (களஞ்சியப் பொறுப்பாளர்)
ஆகியோருக்கும் கோரக்கன்கட்டு சித்திவிநாயகர் திவ்விய திருவருள் பாலிப்பாரக.

## நன்றி நவிலல்:

பரந்தன் இரசாயனப் பொருட்கள் கூட்டுத்தாபனத் தலைவர் P. L. W. பெர்னன்டோ அவர்களும்,
மற்றும் இயக்குனர் சபை அங்கத்தவர்களுக்கும்,
திரு. D. K. சுப்பிரமணியம் (பொதுமுகாமையாளர்)
,, S. S. செபரத்தினம் (உற்பத்தி அதிபர்)
,, க. பாலேந்திரா (உற்பத்தி அதிபர்)
,, K. சரவணமுத்து (பொறியியலாளர்)

திரு. K. ஸ்ரீகாந்தன் (கணக்காய்வாளர்)

ஆகிய இப்பெரியோர்களது பேராதரவும்,

திரு. K. கனகசபை (கட்டிடப்பகுதி)
,, S. அந்தோனிப்பிள்ளை (மின்சாரப்பகுதி)
,, K. இராசரத்தினம் (பொறியியல்பகுதி)

திரு. கா. சி. ஆறுமுகம்,
,, செ. நாகேந்திரன்,
,, R. சிவபாதம்,
,, S. சிவபாலநாதன்,
,, ம. மார்க்கண்டு,
,, க. மார்க்கண்டு,
,, சி. மகேந்திரன்,
,, K. அருணகிரி,
,, சி. சுந்தரலிங்கம்,
,, ச. மயில்வாகனம்,
,, வே. பரமநாதன்,
,, இ. சரவணமுத்து,
,, S. மகாலிங்கம்,

திரு. S. மார்க்கண்டு,
,, S. நாகரத்தினம்,
,, S. சண்முகராசா,
,, க. சுந்தரலிங்கம்,
,, சி. வாதவூரன்,
,, S. நாகநாதன்,
,, R. K இரத்தினம்,
,, செ. பத்மநாதன்,
,, தி. சூசைப்பிள்ளை,
,, சி. க. இரத்தினம்,
,, சொ. தருமநாயகம்,
,, சி. விக்கினேஸ்வரன்,
,, க. பற்குணநாதன்.

மற்றும் சகல ஊழியர்களதும் தொண்டுமே இவ்வாலயத்தின் தோற்றமெனின் மிகையாகாது.

பிறப்பற்றற்று இறைபற்றையே பற்றுக்கோடாகக் கொண்டு கண்துஞ்சாது தொண்டாற்றும் சிவதொண்டரும் திருப்பணிசபைத் தலைவருமான திரு. சி. குழந்தைவேலு அவர்கள் வருங்காலத்திலும், இத்திருப்பணிச்சபைக்கு தலைவராக இருந்து தொண்டாற்ற சித்திவிநாயகர் திருவருள் பாலிப்பாராக.

நிகழும் பிரமாதீச வருடம் ஐப்பசி மாதம் 23-ம் நாள் 8-11-73 வியாழக்கிழமை ரேவதி நட்சத்திரத்தில் வேதாகம முறைப்பிறழாது கும்பாபிஷேகத்தைப் பக்தி சிரத்தையுடன் நிறைவேற்றிய பிரதம குருக்கள் சிவாகமஞானபானு சிவ ஸ்ரீ நா. சிவசாமிக்குருக்கள் கரணவாய், ஏனைய குருமார்களையும் நினைவுகூருவம்.

இத்திருத்தலத்தின் திருப்பணி வேலைகளைச் சிறப்பாகச் செய்து முடித்து உதவிய ஸ்தபதி திரு. ம. பிரசாத் அராலி,

சிற்பாசாரிகளான: திரு. பெரியசாமி ஆச்சாரி, மாவிட்டபுரம், திரு. கோவிந்தசாமி ஆச்சாரி, யாழ்ப்பாணம், திரு. நா. பாலகிருஷ்ணன் ஆச்சாரி, யாழ்ப்பாணம், திரு. ஞானப்பிரகாச ஆச்சாரி வவுனியா, ஆகியோர்களையும், வர்ணவேலைசெய்த திரு. வே. கணேசலிங்கம், கச்சேரி நல்லூர்வீதி, யாழ்ப்பாணம், அவர்களையும், கோவில்

தொண்டுகள் செய்தும் செய்துவரும் திரு. சி. க. இரத்தினம், திரு. செ. நாகராசா, திரு. சொ. தர்மநாயகம், திரு. க. பற்குண நாதன், திரு. இ. சரவணமுத்து, திரு. சி. விக்னேஸ்வரன், திரு S. அமிர்தலிங்கம், திரு. வே. பரமநாதன் - தம்பதிகள், திரு. அ. பொன்னையா - தம்பதிகள், செல்வி. பிறேமா - செல்வரத்தினம், செல்வன். மனோகுமார். மகேசன் மற்றும் சைவ அன்பர்கள் ஆகியோர்களையும், நன்றியுடன் நினைவுகூருவம்.

## வெளியீட்டாளர் குறிப்பு:

அன்பர்களே!

ஆரம்பகாலமுதல் இத்திருப்பணிக்காக, அல்லும் பகலும் அயராது உழைத்தவர்களையும் ஊக்குவித்தவர்களையும், ஆலயம் அமைக்கும் நோக்கத்தை உருவகுத்துத்தந்தவர்களையும், மற்றும் இவர்களில் ஓய்வுபெற்றும், மாற்றம் அடைந்தும், சென்ற நமது நண்பர்கள், அதிகாரிகளின் திருத்தொண்டையும் அவர்களது பெயர்களையும், நாம் வெளியிடுவது நம் கடமையாகவும், நன்றிகூறும் முகமாகவும் அமையவேண்டுமென்னும் நோக்குடன் மிக விரிவாக இச்சிறப்பு மலரை வெளியிட எண்ணியிருந்தும், இவ்வாலயத் திருப்பணிச்சபை, நிர்வாக சபையினரின் பணிப்பால் இவ் விடயக்குறைப்பும், பதிகங்களின் நீங்கமும் செய்யப்பட்டு நிர்வாகசபையினரின் அனுமதியுடன் இவ்வெளியீடு வெளியிடப்படுகிறது.

இவ்வெளியீட்டால் அன்பர்களும், சைவ அபிமானிகளும் மேலும் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை கோரக்கன்கட்டு சித்திவிநாயகர் ஆலயத் திருப்பணிக்கு உதவுவார்கள் என்பதே எமது நம்பிக்கை.

இச்சிறப்பு மலரை விரைவில் அச்சிட்டுத் தந்துதவிய யாழ்ப்பாணம், ஸ்ரீ தையல்நாயகி அச்சகத்தாருக்கும் எனது அன்பார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நன்றி மறப்பது நன்று அன்று நன்று அல்லது
அன்றே மறப்பது நன்று.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வுஇல்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

— திருக்குறள்

இங்ஙனம்
கிருஷ்ணபிள்ளை - தியாகராசா
பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை.
"இரசாயனபுரம்"
பரந்தன்.

20-12-73

ஸ்ரீ தையல்நாயகி அச்சகம்,
320, கே. கே. எஸ், வீதி,
யாழ்ப்பாணம்.